**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213055

1. District : திருச்சி மாவட்டம்
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
காவல்நிலையம்
Year: 2023
ஆண்டு
FIR No.: 17
மு.த.அ. எண்
Date: 21/12/2023
நாள்

2. (i) Act சட்டம்: 2018 ஆண்டிற்கு முன்
Sections பிரிவுகள்: 109, 120(B), 409, 420, 465, 468, 471, 477(A) இ.த.ச. மற்றும் 13(1)(c) ஊ.த.சட்டம் -1988
(ii) Act சட்டம்: 2018 ஆண்டிற்குப் பின்
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 120(B), 409, 420, 465, 468, 471, 477(A) இ.த.ச. மற்றும் 12, 13(1)(a) ஊ.த.சட்டம் -1988 (2018 திருத்தப்பட்டது)
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 2015 ஆண்டு முதல்
நாள் முதல்
Date to : 2020 ஆண்டு வரை
நாள் வரை

Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 21/12/2023
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 11:30 hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time
நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்துமூலமாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 Km மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : நெட்டுமாங்கிழ ஊராட்சி, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருச்சி.
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : அ. பிரசன்னா வெங்கடேஷ்
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : தம்பிதுரை
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1975
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : காவல் ஆய்வாளர்
தொழில்
(g) Address : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

குற்றம்சாட்டப்பட்டவரின் விவரம் காலம் (12) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

விரிவான விசாரணை, மேற்கொள்ளப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்**

1. திரு.இளையராஜா வயது 44/2023, தபெ.போஜன், ரெட்டிமாங்குடி ஊராட்சி மன்ற செயலர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
2. திரு.நாராயணன் வயது 56/2023, த/பெ.சுப்ரமணியன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
3. திரு.சீனிவாசப்பெருமாள் வயது 52/2023, த/பெ.நல்லமுத்து, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
4. திரு.சரவணன் வயது 50/2023, த/பெ.வையாபுரி, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
5. திருமதி.ஜோஸ்பின் ஜெசிந்தா வயது 58/2023, க/பெ.அல்போன்ஸ் ராஜ், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
6. திருமதி.ரோஷன் பானு வயது 48/2023, த/பெ.ஹானச்ர், க/பெ.முஸ்தபா, முன்னாள் ஒன்றிய மேற்பார்வையாளர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.
7. திரு.பழனிச்சாமி வயது 45/2023, த/பெ.தங்கமுத்து, வட்டார ஒருங்கிணைப்பாளர், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.

(முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டுள்ள : …… பதவி …… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21/12/2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் மதியம் 12.45 மணி

Name: பெயர் …………
Rank: நிலை …………

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2023–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம்–12ன் தொடர்ச்சி....**

தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையத்தின் அ.சா.கு.எண்.1760/வி.ப.ஆ–II/2023–1, நாள்.03.07.2023 உத்தரவின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அரசாணை (3D) எண்.34, நாள். 09.10.2023–ன்படி சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குனரின் நமுணா எண். DE 47/2021/RDP/TR, நாள். 20.10.2023–ல் கொடுக்கப்பட்ட தகவலை கொண்டு காலம்–7ல் கண்ட எதிரிகள் 1 முதல் 7 வரையானோர் தங்களுக்கு வழங்கப்பட்ட அரசு பணியை முறையாக செய்யாமல் நேர்மையற்ற முறையில் அரசு திட்டத்தில் பொய்யான ஆவணங்களை தயார் செய்து முறையற்ற பயனாளிகளை தேர்வு செய்து குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு 2016ஆம் ஆண்டு முதல் அவர்களுக்குரிய காசோலை அதிகாரம் பறிக்கப்பட்டு, 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு(கி.ஊ) காசோலை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் திரு.தங்கவேலு, ஊராட்சி மன்றத்தலைவர், ரெட்டிமாங்குடி ஊராட்சி என்பவர் மீதான குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இல்லை என்பதும் இக்குற்றச்சாட்டில் எதிரிகள் 2 முதல் 7 வரையானவர்கள் பொய்யான ஆவணங்களை நேர்மையற்ற முறையில் தயார் செய்து அரசு நிதி தொகை இழப்பு ஏற்பட குற்றமுறு கூட்டு சதியில் ஈடுபட்டது தெரிய வந்ததால் எதிரிகள் 2 முதல் 7 வரையானவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டம்–1988 (திருத்தப்பட்டது 2018) பிரிவு 17–A(1)ன்படி வழக்கு பதிவு செய்ய அனுமதி பெற்று முதல் தகவல் அறிக்கையின் காலம்–7ல் காணும் எதிரிகள் 1 முதல் 7 வரையான நபர்கள் மீது வழக்கு பதிவு செய்கிறேன். மேற்கண்ட 1 முதல் 7 வரையான எதிரிகள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தப்பட்டது 2018) பிரிவு 2(c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள். மத்திய மாநில அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS) மற்றும் தூய்மை பாரத இயக்கம் (SWACHH BHARAT MISSION) திட்டம் மூலம் 2015ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலத்தில் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ரெட்டிமாங்குடி ஊராட்சியில் கழிப்பறை கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டநிதியில் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமல் பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு நிதித்தொகை முறைகேடாக செலவீனம் மேற்கொண்டது தொடர்பாக திரு.தங்கவேலு, ஊராட்சி மன்றத்தலைவர், ரெட்டிமாங்குடி ஊராட்சி மற்றும் திரு.இளையராஜா, ஊராட்சி மன்ற செயலர், ரெட்டிமாங்குடி ஆகியோர்கள் மீது அனுப்பிய புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. 28.07.2021 அனுப்புநர் ரெங்கசாமி, த/பெ.பொன்னுசாமி, 5–வது உறுப்பினர், கீழத்தெரு, ரெட்டிமாங்குடி அஞ்சல்,

லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம், பெறுநர் உயர்திரு மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, எண்.23, Race Course ரோடு, அரசு சட்ட கல்லூரி எதிரியில், திருச்சி – 620 023, பொருள்: ரெட்டிமாங்குடி கிராமத்தில் ஊராட்சி செயலாளர் திரு.இளையராஜா செய்யும் சட்ட விரோத செயல்கள் மற்றும் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் செயல்களை தடுத்தல் – அதற்கு துணை போகும் ஊராட்சி மன்ற தலைவர் திரு.முக.தங்கவேலு அவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டி. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். நான் பிறந்தது ரெட்டிமாங்குடி கிராமம் ஆகும், நான் கடந்த 2019–ம் வருடத்தில உள்ளாட்சி தேர்தலில் ரெட்டிமாங்குடி கிராமத்தின் 5–வது வார்டின் மக்கள் பிரதிநிதியாக தேர்தெடுக்கப்பட்டேன். அதேபோல் கடந்த 2019–ம் வருடம் ரெட்டிமாங்குடி கிராமத்தில் ஊராட்சி தேர்தலில் திரு.முக.தங்கவேலு அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார். தற்போதைய ஊராட்சி செயலாளர் இளையராஜா சுமார் 20 ஆண்டுகள் மேலாக எங்கள் ஊரில் வேலை செய்து வருகின்றார். ஊராட்சி செயலர் பல்வேறு சட்டவிரோத செயல்கள் மற்றும் அரசில் பொது பணத்தை கொள்ளை அடிக்கவும் மற்றும் அரசு பணியை தனக்கு வேண்டியவர்களுக்கு நபர்களுக்கு தவறாகவும் பயன்படுத்தி வருகின்றார் என்பதனை நான் ஊராட்சி வார்டு நெம்பர் பணியாற்ற தெரிந்து கொண்டேன். அதற்கு ஊராட்சி தலைவர் அவர்களுக்கு முழு பங்கு உள்ளது. மத்திய அரசின் சுகாதாரதிட்டமான Swachh Bharat Urban படி நான்கு வகையான திட்டத்தின் மூலம் கிராமத்திற்கு கழிப்பறை அரசாங்கத்தின் உதவியுடன் கட்டித் தரப்படுகிறது. அதில் முதல் வகை SBM (7200+4800) இரண்டாம் வகை SBM (9000+3000) மூன்றாம் வகை MGNREGA நான்காம் வகை Individual Household Latrine (IHHL) ஆகும். மத்திய அரசின் சட்டத்தின்படி ஊராட்சி குழுவின் பயன்பெறும் நபர்களின் பெயர்கள் பரிசீலனை செய்யப்படும். பரிசீலனை செய்யப்பட்ட பெயர்களை மாவட்ட ஆட்சியர் செக்ஷன் உத்தரவு (Sanction Order) உத்தரவு அளிப்பார். உத்தரவு அறித்த நபர்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் காசோலை வழங்குவார். கழிப்பறையை கட்டி தரும் பொறுப்பு ஊராட்சி தலைவர் மற்றும் ஊராட்சி செயலாளரை சாரும். அதன்படி புதிய நபர்களுக்கு கழிப்பறை கட்டும் விண்ணப்பதாரர் ஏற்கனவே கட்டப்பட்ட கழிப்பறை பயனாளி பெயரை மற்றும் மரியாயி என்ற இறத்த நபரின் பெயரை சேர்க்க பெயரை சேர்க்க முயற்சி செய்தார். அதன் பின்னர் கீழ்கண்ட திட்டத்தின் மூலம் Individual Household Latrine (IHHL) Swa chn Bharat Urban 2013-2014 வருடம் கீழ்கண்ட நபர்களுக்கு கழிப்பிட நிதி போடப்பட்டு உள்ளது. சின்னபிள்ளை, செல்லம், சுமதி, அல்போன்ஸ்மேரி, சுதா, முருகேசன், மகேஷ் மேலும் மேற்சொன்ன நபர்களுக்கு வேறு ஒரு திட்டத்தின் மூலம் கட்டப்படாத பழைய கழிப்பிட

ஆவணம் மூலம் நிதி அளிக்கப்பட்டு உள்ளது. அதற்கு பிந்தைய நிதி ஆண்டில் ஏற்பட்ட ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு 2014–2015 பட்டு, க/பெ.ரெங்கராஜ், ஜெகதாம்பாள், க/பெ.பெரியசாமி, திருமலை த/பெ.பெருமாள், அகிலாண்டம், க/பெ.சின்னையன், 2015–2016 ராஜாமணி, க/பெ.ரெங்கசாமி, முத்துலட்சுமி, க/பெ.ரவி, வீரம்மாள், க/பெ.கோவிந்தன், சுதா, க/பெ.செந்தில்குமார், பூங்கொடி, க/பெ.ராஜேந்திரன், செல்லம்மாள், க/பெ.கிருஷ்ணமூர்த்தி, சின்னப்பன், பச்சையம்மாள், வசந்தா, க/பெ.திருமலை, ராஜாமணி, க/பெ.சுப்ரமணியன், அன்புமேரி, க/பெ.ஜெயபால், 2016–2017 அம்பிகாபதி த/பெ.செல்வகுமார், 2017–2018 செல்லம்மாள், க/பெ.மாணிக்கம், ஜான் கென்னடி, த/பெ.இல்பர்ட் மேரி, வள்ளிநாயகி, க/பெ.அன்பழகன், சரஸ்வதி, க/பெ.நல்லுசாமி, பார்வதி, க/பெ.போஜன் (ஊராட்சி செயலர் குடும்பம்) சுமதி, க/பெ.முத்துசாமி, பாப்பாத்தி, க/பெ.இளையராஜா (ஊராட்சி செயலர்) Swachh Bharat Urban தகுதியான நபர்களாக வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் வறுமை கோட்டிற்கு மேல் உள்ளவர்கள், நிலம் இல்லாத ஏழை மக்கள், பெண்களை தலைமையாக கொண்ட வீடு ஆகியோர் மட்டும் தகுதியானவர்கள். ஆனால் அரசு வேலை செய்யும் நபர்களான மெர்குரி மேனகா, க/பெ.பால்ராஜ், அமுதா, க/பெ.ராமசாமி, ஜோதி, க/பெ.நித்யா ஆனந்தம், சுமதி, க/பெ.ராஜேந்திரன், பாப்பாத்தி, க/பெ.இளையராஜா மற்றும் அந்தோணிசாமி த/பெ.சத்தியநாதன் ஆகிய நபர்களுக்கு சட்டத்திற்கு எதிராக ஊராட்சி செயலா உதவியாக இருந்துள்ளார். மேலும் கழிப்பறையை கட்டாமல் Swachh Bharat Urban திட்டத்தில் பணம் உதவி பெற ஊராட்சி செயலர் உதவியாக இருந்துள்ளார். அவர்கள் பாத்திமா மேரி, க/பெ.சந்தியாகு, கில்பர்ட் மேரி, க/பெ.ஜான் கென்னடி, பிச்சையம்மாள், க/பெ.கிறிஸ்டோபர், சின்னப்பன், க/பெ.மைக்கேல், மாரியாயி, க/பெ.பெரியசாமி, மாரியாயி, க/பெ.பெருமாள், வீரம்மாள், க/பெ.கோவிந்தன், மல்லிகா, க/பெ.சுரேஷ், கிருஷ்ணவேணி, க/பெ.புண்ணியமூர்த்தி, அம்பிகாவதி, க/பெ.செல்வகுமார் மற்றும் ரமணி, க/பெ.கண்ணன் ஆவார்கள். மேலும் ஒரே முறை கட்டப்பட்ட கழிவறைக்கு இரண்டு முறை பணம் உதவி பெற்றவர்கள். கொடியரசி, க/பெ.அமலதாஸ், டெய்சி பொற்செல்வி, க/பெ.அன்புநேசன், புஷ்பராணி, க/பெ.துரைசாமி, முத்தாயி, க/பெ.முருகன், ஒப்பிலாயி, க/பெ.முருகன், லதா, க/பெ.லாரன்ஸ், மங்கலம், க/பெ.அகஸ்டின் (2021–2022) பாத்திமாமேரி, க/பெ.ஜெயசீலன் (2021–2022) சின்னப்பன், த/பெ.மைக்கேல், பிச்சையம்மாள், க/பெ.கிறிஸ்டோபர், சுமதி க/பெ.கமலகண்ணன், கஸ்தூரிபாய், க/பெ.லெனின், சந்தானமேரி, த/பெ.மரியாள், சவரியார், த/பெ.விஸ்வாசம், ஆரோக்கிய டெய்சி ராணி, க/பெ.ஜான்குமார், ரெஜினாமேரி, க/பெ.சவேரியார், அன்புமேரி, க/பெ.ஜெயபால், பாப்பாத்தி, க/பெ.இளையராஜா (2021–2022) மற்றும் மேனகா, க/பெ.ராமராஜ் (2021–2022) ஆவார்கள். மேலும் நூறு நாள்

வேலை திட்டத்தில் அனைவரும் பணி வேண்டும் எனில் அதற்கு வீட்டு வரி ரசீது அவசியம் என தெரிவித்தனர்கள். அதன்படி அனைவரும் வீட்டுவரி ரசீது போடப்பட்டு உள்ளது. அனைவரின் ஆதார் அட்டை அசல் ஊராட்சி செயலரிடம் கொடுத்துள்ளார்கள். அதன் மூலம் ஊராட்சி செயலர் 100 நாள் வேலை திட்டத்தின் சம்பளத்தை எடுத்துள்ளார். மேலும் ஊராட்சி செயலர் அவர்களின் குடும்பத்தில் அவரின் தந்தை போஜன் மற்றும் தாய் பார்வதி ஆகியோருக்கு நூறுநாள் வேலை திட்ட அட்டை உள்ளது. ஆனால் அவர்கள் எந்தவித வேலையும் இதுவரை செய்வது இல்லை. மேலும் ஊராட்சி துணைத்தலைவர் திரு.செந்தில்குமார் மற்றும் அவரின் மனைவி சுகன்யா ஆகியோர்களுக்கு நூறு நாள் வேலை திட்ட அட்டை அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால் அவர்கள் தங்களுடைய நிலத்தில் வேலை மட்டும் செய்து வருகின்றார்கள். ஆனாலும் மேற்சொன்ன அனைவரும் பணி ஊதியம் அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்தால், ஒரு நாள் ஊதியம் 170 அல்லது 180 மட்டுமே சம்பளமாக அளிக்கின்றார்கள். மீதியுள்ள பணத்தை ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி தலைவர் கையாடல் செய்கிறார்கள். மேலும் வீடு கட்டாத பல நபர்களுக்கு அரசின் பணத்தை லஞ்சம் பெற்றுக்கொண்டு பல்வேறு திட்டத்தில பணத்தை அளித்தும் உள்ளார். ஆனால் அவர்களுக்கு ஊராட்சி செயலாளர் உதவியுடன் முழுப்பணம் அளிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2016–2017 வருடத்தில் சாரா, க/பெ.சமுத்திரம் என்ற பயனாளிக்கு வீடு கட்டுவதற்கு முழு பணம் உதவி அரசாங்கத்தில் கொடுக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட நபர் வீடு கட்ட ஆரம்பிக்கவில்லை. 2019–2020 வருடத்தில் அளிக்கப்பட்ட பயனாளிகள் யாவரும் வீடு கட்ட ஆரம்பிக்கவில்லை. ஆனால் ஊராட்சி செயலர் 2020–2021 மற்றும் 2021–2022 வருடத்திற்கு பல்வேறு நபர்களிடமிருந்து பணம் உதவி பெற்றுக்கொண்டு அவர்களுக்கு அரசாங்க திட்டத்தில பணம் கிடைக்க உதவியாக இருந்து வந்தார். மேலும் 2014–2015 நிதியாண்டில் வேலை அனுமதி எண்.2904142058 பயனாளி பெயர் – ஸ்டெல்லாமேரி / செபஸ்தியார் என்பவருக்கு வீடு வழங்கப்பட்டு அவருக்கு MGNRERS திட்டத்தில் நிதி வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் இல்லை. மேற்சொன்ன தவறான செயல்களை ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி தலைவரிடம் கேட்டதற்கு எங்களுக்கு அனைத்து மேல் அதிகாரிகளை எங்களுக்கு தெரியும் அதனால் எங்களை ஒன்றும் செய்ய முடியாது நீ ஒரு வார்டு நெம்பர் மட்டும் தான் அடுத்த முறை உன்னை ஜெயிக்க விடமாட்டோம் என்று மிரட்டினார். எனவே கனம் ஐயா அவர்கள் ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி தலைவர் ஆகியோர்கள் மீது அரசின் பணத்தை ஏமாற்றி மற்றும் பணி சட்ட விரோதமாக செயல்கள் பயன்படுத்துவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd.XXXXXXX) P.ரெங்கசாமி. மேற்கண்ட 1 முதல் 7

எதிரிகள் 2015ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலத்தில் மத்திய மாநில அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS) மற்றும் தூய்மை பாரத இயக்கம் (SWACHH BHARAT MISSION) முழு சுகாதார திட்டத்தில், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.12,000/– ஆக நிர்ணயிக்கப்பட்டு அதன்படி தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கிராம ஊராட்சிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறைகளை கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறித்து அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தகவல் தெரிவித்து, ஊராட்சி மன்ற தலைவர் மூலம் பயனாளிகள் தேர்வு செய்து, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களுக்கு அனுப்பிய பட்டியலின் அடிப்படையில் தகுதியான பயனாளியா என அரசால் நியமிக்கப்பட்ட தொகுப்பூதிய பணியாளரான வட்டார ஒருங்கிணைப்பாளர் மூலம் களஆய்வு செய்து, பட்டியல் தயார் செய்து, அதன்படி தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களும் பயனாளிகள் குறித்து உண்மை தன்மை குறித்த களஆய்வு செய்த பின்பு, பயனாளிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட வேண்டும். தேர்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு அவர்களது கழிப்பறையை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்(MGNREGS) மற்றும் தூய்மை பாரத இயக்கம் (SWACHH BHARAT MISSION) திட்டத்தில் கழிப்பறை கட்டுவதற்கு கட்டுமான பொருட்கள் மற்றும் பேசின் ஆகியவை கொள்முதல் செய்ய ரூ.9,000/–ம், கட்டுமானத்திற்கு ரூ.3000/– ஆக கூடுதல் ரூ.12,000/–ஐ இரு தவணைகளில் பயனாளிக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்களுக்கு கழிப்பறை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாது. கழிப்பறை இருக்கும் நபர்களுக்கு மீண்டும் கழிப்பறை ஒதுக்கீடு செய்யக்கூடாது. சொந்த வீடு உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் கழிப்பறை இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு கழிப்பறை கட்டுவதற்கு பயனாளியாக தேர்வு செய்யப்படுவர். தூய்மை பாரத இயக்க திட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஊக்க தொகை சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்கு விடுவிக்கப்படும். மேலும் 2015 முதல் 2020 வரை புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், ரெட்டிமாங்குடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS) மற்றும் தூய்மை பாரத இயக்கம் (SWACHH BHARAT MISSION) திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தனி நபர் இல்ல கழிப்பறை திட்டத்தில் கழிப்பறை கட்டுவதற்கு வழங்கப்பட்ட அரசு திட்ட நிதியை பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் போது திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமலும், ஒரே பயனாளிக்கு இரண்டு திட்டத்திலும் பயனடைந்ததாக திட்ட நிதி ஒதுக்கீடு

செய்துள்ளதாகவும், பயனாளிகள் கழிப்பறையை தங்களது சொந்த செலவில் கட்டியதை, மேற்படி திட்டத்தில் கட்டியதாக பொய்யாக ஆவணம் தயார் செய்து திட்ட நிதி எடுக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசு ஊழியர்களை பயனாளியாக தேர்வு செய்யக்கூடாது என்ற விதி முறையினை மீறி அரசு ஊழியர்களின் மனைவிகளை பயனாளியாக தேர்வு செய்து கழிப்பறை கட்ட திட்ட நிதித்தொகை வழங்கப்பட்டுள்ளதன் மூலம் எதிரிகள் குற்றமுறு சதி செய்து நேர்மையற்ற முறையில் பொய்யான ஆவணங்களை உண்மையென பதிவு செய்து அரசு நிதிதொகையை நம்பிக்கை மோசடி செய்ததன் மூலம் ரெட்டிமாங்குடி ஊராட்சியில் ரூ.2,64,000/–த்திற்கு மேற்சொன்ன இரண்டு தனிநபர் இல்லக்கழிப்பறை திட்டத்தின் மூலம் அரசு நிதி தொகை முறைகேடாக செலவு செய்து நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. கடந்த **2015ஆம் ஆண்டு** முதல் **2019ஆம் ஆண்டு** வரை காலத்தில் **MGNREGS** மற்றும் **SWACHH BHARAT MISSION** ஆகிய திட்டங்களில் ஆறு பயனாளிகள் தங்கள் சொந்த செலவில் கட்டிய கழிப்பறையை அரசு நிதி தொகை மூலம் கட்டப்பட்டதாக எதிரிகள் 1 முதல் 4 மற்றும் 6 ஆகியோர்களால் பொய்யாக புனையப்பட்ட ஆவணங்கள் உண்மையென தயார் செய்யப்பட்டதன் மூலம் ரூபாய் **72,000/–** திட்ட நிதித்தொகை முறைகேடாக நிதியிழப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த **2017ஆம்** ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை **SWACHH BHARAT MISSION** திட்டத்தில் 11 பயனாளிகளால் வெவ்வேறு ஆண்டுகளில் இரண்டு முறை கழிப்பறை கட்டியதாக அரசு வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்காமல் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதன் மூலம் எதிரிகள் 1 மற்றும் 3 முதல் 7 வரையானவர்கள் குற்றமுறு கூட்டு சதி செய்து நேர்மையற்ற முறையில் அரசு திட்ட நிதித்தொகை ரூபாய் **1,32,000/–** முறைகேடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த **2015ஆம்** ஆண்டு முதல் **2020ஆம்** ஆண்டு வரையான காலத்தில் **MGNREGS** மற்றும் **SWACHH BHARAT MISSION** ஆகிய திட்டங்களில் 5 பயனாளிகளின் கணவர்கள் அரசு ஊழியர்களாக இருக்கும் நிலையில் அவர்களின் மனைவிகளை பயனாளிகளாக திட்டத்தில் தேர்வு செய்து ரூபாய் **60,000/–** தொகை வழங்கியதன் மூலம் எதிரிகள் 1, 2, 4, 5 மற்றும் 7 வரையானவர்கள் குற்றமுறு கூட்டு சதி செய்து நேர்மையற்ற வகையில் ஈடுபட்டு அரசு திட்ட நிதித்தொகை முறையற்ற வகையில் செலவிடப்பட்டு அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ரெட்டிமாங்குடி ஊராட்சியில் தனி நபர் இல்ல கழிப்பறை கட்டியதில் அரசு நிதித்தொகை ரூ.2,64,000/– வரை நம்பிக்கை மோசடி செய்யப்பட்டதன் மூலம் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது தொடர்பாக எதிரிகள் மீதான குற்றச்சாட்டு **2015ஆம் ஆண்டு** முதல் **2018ஆம் ஆண்டு** வரையான காலத்தில் எதிரிகள் 1 முதல் 6 வரையானவர்கள் குற்றமுறு கூட்டு சதியில் ஈடுபட்டு போலியான

ஆவணங்களை தயார் செய்து நேர்மையற்ற முறையில் ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் செயல்பட்டு அரசு நிதி முறைகேடாக மோசடி செய்ததின் மூலம் இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் **120(B), 409, 420, 465, 468, 471, 477(A)** இந்திய **தண்டனை சட்டம் மற்றும் 13(1)(C)–ஊழல் தடுப்பு சட்டம் – 1988ன்படியும்,** மற்றும் எதிரி–7 மேற்சொன்ன முறைகேடுகளுக்கு உடந்தையாக செயல்பட்டதன் மூலம் **இந்திய தண்டனை சட்ட பிரிவு 109–ன்படியும், 2019ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலத்தில்** எதிரி–1, 3, 5 மற்றும் 6 ஆகியோர்கள் குற்றமுறு சதியில் ஈடுபட்டு போலியான ஆவணங்களை தயார் செய்து நேர்மையற்ற முறையில் ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் செயல்பட்டு அரசு நிதி முறைகேடு ஏற்படுத்தியதன் மூலம் இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் **120(B), 409, 420, 465, 468, 471, 477(A)** இந்திய தண்டனை சட்டம் மற்றும் **13(1)(a)**–ஊழல் தடுப்பு சட்டம் – 1988 **(as amended in 2018)**-ன்படியும், மற்றும் எதிரி–7 மேற்சொன்ன முறைகேடுகளுக்கு உடந்தையாக செயல்பட்டதன் மூலம் **12 of PC Act 1988 (as amended in 2018)**–ன்படியும் திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 17/2023–ன்படி 21.12.2023ஆம் தேதி காலை 11.30 மணிக்கு என்னால் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கும் மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

21/12/2023
Insp. VSAC, Trichy.